மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்ட* smart city *திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய, மாநில அரசுகள் செய்து தரக்கூடிய திட்டத்தில்* ABD area *என்று ஒரு* area*–வை வரையறை செய்கிறார்கள். அப்பகுதிகளில் பணிகளை நாம் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்னென்ன பணிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசாங்கம்* norms *கொடுத்திருக்கிறது. இருந்தாலும்கூட, பலமுறை மத்திய அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளோம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதன்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றார்கள்.* ABD area*–வை கொஞ்சம் விரிவுபடுத்தச் சொல்லியிருக்கின்றோம். சில பணிகள் அவசியமாயிருப்பின், அதையொட்டியிருக்கக்கூடிய வார்டுகளிலும் செய்து கொடுப்பதற்காக தற்போது பேசி முடித்திருக்கின்றோம்; அதற்கு ஒப்புதல் வழங்கப்படும் எனத் தெரிகிறது. அதேபோன்று சாலைகள் பழுதடைந்திருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிதிநிலைமையைப் பொறுத்து பழுதான சாலைகள் கண்டிப்பாக சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மீனவர்களுக்கு வீடுகள்

***26907—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 1]

(அ) திண்டிவனம் வட்டம், வெண்மணியாத்தூர் கிராமத்தில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு கடல் மீனவர், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் சார்ந்த மீனவர்களுக்கு மத்திய அரசின் நீலப் புரட்சித் திட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் செயல்படுத்தப்படும் Indira Awaas Yojana *திட்டத்தில் ஒரு வீட்டிற்கான அளவுத் தொகை ரூ.1,70,000/– என்ற அடிப்படையில், 2016–2017 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு பிரத்யேகமான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை நல்வழிப்படுத்தி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5 ஆயிரம் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசால் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெண்மணியாத்தூர் கிராமத்தில் உள்ள உள்நாட்டு மீனவ மகளிர் பயனாளிகளுக்கு 45 வீடுகள் புதியதாகக் கட்டுவதற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டு, வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களுக்கு இதுவரை இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை; வீடுகளும் கட்டித் தரப்படவில்லை. வெண்மணியாத்தூர் கிராமம் எனது திண்டிவனம் தொகுதியில் இல்லை; மயிலம் தொகுதியில் அடங்கியுள்ள ஒரு பகுதி. இதுகுறித்து நாங்கள் கோரிக்கை வைத்த பிறகு, அந்தப் பகுதியில் 49 வீட்டுமனைப் பட்டாக்களை*

வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், வீடுகள் கட்டுவதற்கான எந்த முகாந்திரமும் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அவர்களுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தொகுதியில் 45 வீடுகள் கட்டப்படுவது குறித்து நான் இங்கே பதில் சொன்னேன். அதிலே, earth work என்று சொல்லக்கூடிய வேலை மட்டும் 12 வீடுகளில் நடைபெற்று வருகிறது; basement level work, 19 வீடுகளில் நடைபெற்று வருகிறது; lintel level work, ஒரு வீட்டில் நடைபெற்று வருகிறது; roof level work என்று சொல்லக்கூடிய மேல்தளம் போடும் பணி 4 வீடுகளில் நடைபெற்று வருகிறது. எனவே, குறித்த காலத்தில் 45 வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. எனவே, விரைவில் பணிகள் முடிக்கப்படும்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்தில் உள்நாட்டு பர்வதராஜகுல மீனவர்களைப் பொறுத்தவரை, மொத்தம் 150 குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களில் 49 பேருக்குத்தான் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் 4 பேர் அரசு ஊழியர்கள் என்பதால் வீடு கட்ட முடியாது என்று கூறிவிட்டார்கள். அந்த 45 பேர் மட்டுமல்ல, அங்குள்ள 150 குடும்பங்களுக்கும் இந்த நிதியாண்டிலேயே வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 1]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்கூட பல்வேறு வகைகளிலே இதுகுறித்து அரசுக்குத் தெரிவித்து, கோரிக்கைகளாகக் கொடுத்து, அதன் அடிப்படையிலே விழுப்புரம் மாவட்டத்திற்கு மட்டும் 266 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, வீடுகள் ஒதுக்கீடு செய்வது குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இடம்தான் பெரிய பிரச்சினை. பட்டா இருந்து, அவர்கள் மீனவர்களாக இருந்து, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தால், உறுதியாக அவர்களுக்கு வீடுகள் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள சூழ்நிலையில், அவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பட்டாவும் இருந்தால், வேண்டிய விண்ணப்பமும் கொடுத்தால், எவ்வளவு வீடுகள் கேட்டாலும் சரி, உடனடியாக மகிழ்ச்சியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, புலிவலம், ஈக்கீழனூர், மேலையூர், கீழைவனூர், கனகம்பாடி போன்ற கிராமங்களில் மீனவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற காரணத்தால், வீடு கட்டித் தர வேண்டுமென்று அரசுக்கு ஏற்கெனவே மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்திலே கொண்டு, அரசு மூலமாக அந்த ஏழை மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி,*

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, மொத்தம் 510 வீடுகள் தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே, இப்போது 266 வீடுகளுக்கு பட்டாக்கள் இருந்த காரணத்தினால் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்ன அந்தப் பதிலின் அடிப்படையில், பட்டா இருந்து, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்தால், உறுதியாக அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகவே இதுவரை 85 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்திருக்கின்றது. தற்போது 53 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, நிதி இருக்கின்றது; இடம் இருந்தால் கண்டிப்பாக அதில் மாறுபட்ட கருத்து அரசாங்கத்திற்கு இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்கே பட்டா இருக்கிறதோ அதைக் கண்டுபிடிக்க வேண்டும். நாங்களும், அரசும், மீன் வளத் துறை உதவி இயக்குநர்களும் உங்களுடன் co–ordinate *செய்து, பட்டா இருக்கும் இடங்களை* identify *செய்து, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக, உறுதியாக வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984 ஆம் ஆண்டு, 1989 ஆம் ஆண்டு மற்றும் 1991 ஆம் ஆண்டு கடலோர கிராமங்களில் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரில் 'சிங்காரவேலர் குடியிருப்புத் திட்டத்தின்'கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால், அந்த வீடுகள் எல்லாம் இப்போது பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளன. அந்த பழுதடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 1]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக* budget demand*–லே மீனவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதியில் பாதி அளவு கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் போகிறது. அதனால் உறுப்பினர் கவலைப்படத் தேவையில்லை. ஏற்கெனவே நிறைய கொடுத்திருக்கிறோம். இப்போது கிட்டத்தட்ட 598 வீடுகள் உங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பது* target. *இதில் 405 வீடுகளை இப்போது எடுத்திருக்கிறோம். நீங்கள் சொன்னதுமாதிரி அந்தக் கிராமங்களில் பழுதடைந்த வீடுகளை* renovate *செய்ய முடியவில்லையென்றால், அவற்றை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை பட்டா இருக்கும்பட்சத்தில், இல்லையென்றால்* NOC *இருக்கும்பட்சத்தில், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

சட்டக் கல்லூரி

***46876—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலே புதிய சட்டக் கல்லூரி அமைக்கின்ற கருத்துரு ஏதும் இல்லை.